இணைப்பு—I.

[..18..ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண். 408-க்கான விடையைக் காண்க.]

வரிசை எண்ணும், தீர்மானமும்.	எடுக்கப்பட்ட நடவடிக்கை.
(1)	(2)
1 ஒரு ஆண்டு நிகர வருமானம் ரூபாய் 5,000 வரை உள்ள கிராமப்புற மக்களும், அதே அளவு வருமானமுள்ள நகர்ப்புற மக்களும் தனியார்களிடம் பெற்றுள்ள கடன்கள் பூராவும் ரத்துச் செய்யப்பட வேண்டும். அதோடு மேற்கண்டவர்கள் ஈட்டுக் கடையில் பொருள்களை (நகைகள், பத்திரங்கள்) அடகு வைத்து வாங்கியுள்ள கடன்கள் முழுவதையும்ரத்துச் செய்து, அடகு வைத்துள்ள பொருள்களை இலவசமாகத் திருப்பிக்கொடுத்துவிட வேண்டும்.	தீர்மானங்கள் உரிய நேரத்தில் அரசின் கருத்தில் கொள்ளப்படும்.
2 ஒரு ஆண்டு நிகர வருமானம் ரூ. 5,000-க்கு மேலே உள்ளவர்கள் பெற்றிருக்கும் கடனுக்கு இதுவரை அவர்கள் செலுத்தியிருக்கும் வட்டியை அசலுக்கு வரவு வைத்துக் கொண்டு, மீதி வரும் அசலின் பாதியை ரத்துச் செய்துவிட்டு பாக்கியுள்ள கடனை 10 ஆண்டு சம தவணையில் பெற்றுக் கொள்ள வேண்டும்.	ஷை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3	கூட்டுறவு, நிலவள வங்கி, தேசவுடைமையாக்கப்பட்ட வங்கி, அரசு ஆகியவைகளிடம் கிணறுகள் வெட்ட கடன் வாங்கி கிணறுகள் வெட்டியபின் தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கிணறுகள் வெட்டுவதற்கு வாங்கியுள்ள கடன்கள் முழுவதையும் ரத்துச் செய்ய வேண்டும்.	நிலவள வங்கியின் கடன் வாங்கி கிணறுகள் வெட்டிய பின் தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் பயனற்ற கிணறுகளுக்கான நிதியிலிருந்து உதவ அரசு விதிகளை அங்கீகரித்து அமுல்படுத்தி வருகிறது.
4	வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விதை, உரம், பூச்சி மருந்து போன்றவைகளுக்காகவும் விவசாயச் செலவிற்காகவும் வாங்கியுள்ள கூட்டுறவு அரசு கடன்கள் முழுவதையும் ரத்து செய்ய வேண்டும்.	வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொடுக்கப்பட்ட குறுகிய கால கடன், 36 பைசாவும் அதற்குக் குறைவாகவும் அணைவாரி அறிவிக்கப்பட்டிருக்கும் இடங்களில் மத்திய கால கடனாக மாற்றம் செய்யப்பட்டு வசூலிக்கப்படுகிறது. கடன்களை தள்ளுபடி செய்ய சட்டத்தில் விதிகள் இல்லை.
5	1386-ம் பசலிவரை உள்ள குத்தகை, வாரபாக்கிகள் முழுவதும் ரத்துச் செய்யப்பட வேண்டும்.	இந்தத் தீர்மானம் அரசு வருவாய்த் துறை சம்பந்தப்பட்டதாதலால் அந்தத் துறைக்கு அனுப்பப்பட்டு அதன் பரிசீலனையில் இருந்து வருகிறது.
6	கூட்டுறவுத்துறையிலுள்ள பிணைக் கடன்களையும் தனியார் துறையிலுள்ள மோசடிக் கடன்கள் முழுவதையும் கிராம அளவில் மக்கள் கமிட்டி அமைத்து கண்டுபிடித்து ரத்துச் செய்ய வேண்டும்.	இந்தத் தீர்மானத்தின் நகல் கூட்டுறவுப் பதிவாளரின் அறிக்கைக்காக அவருக்கு அனுப்பப்பட்டு பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

	வரிசை எண்ணும் தீர்மானமும் (1)	எடுக்கப்பட்ட நடவடிக்கை (2)
7	கூட்டுறவுச் சங்கங்கள், நிலவள வங்கிகள் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், அரசு நிறுவனங்கள் ஆகிய பல்வேறு ஸ்தாபனங்களின் கீழ் விவசாயிகளுக்கு தனித்தனியே கடன்கள் வழங்கும் முறை மாற்றப்பட்டு ஒரே அமைப்பின் கீழ் உரிய காலத்தில் தேவையான கடனை விவசாயிகளுக்கும், குத்தகை வார விவசாயிகளுக்கும், விவசாய தொழிலாளர்கள், பண்ணை ஆட்கள், பருவகாரர்கள் (நீர்பாய்ச்சிகள்) கிராமக் கைவினைஞர்கள் ஆகிய அனைவருக்கும் ஆண்டு 1-க்கு ரூ. 100-க்கு 6½ சதவிகித வட்டிக்கு கடன் கொடுக்க வேண்டும். இவர்களுக்கு கடன் கொடுப்பதற்கு சொத்து ஜாமீன் கோரக் கூடாது.	குறுகிய கால கடன் மற்றும் மத்திய கால கடன் நீண்ட கால கடன்களுக்கான தனித்தனி அமைப்புகளும், இதர அரசு நிறுவனங்கள் மற்றும் அரசுடைமை வங்கிகளும் தற்போது கடன்கள் வழங்கி வருகின்றன. இந்த வழிகளில் கடன்கள் வழங்கும் முறைகளும் விதிகளும் திருப்திகரமான முறையில் இயங்கி வருவதால், இந்த அமைப்புகளை ஒருங்கிணைக்கும் அவசியம் ஏதும் இல்லை. மற்றபடி குறுகிய கால மத்திய கால கடன்கள் இப்போதும் குறிப்பிட்ட அளவுக்கு வழங்கப்படுகின்றன. வட்டி விகிதங்கள் இந்திய சேம வங்கியின் வட்டி விகிதங்களையொட்டியே அமைந்திருக்கின்றன. அவைகளைக் குறைக்க வழியில்லை.
8	கூட்டுறவு கிராம நாணயச் சங்கங்களில் ஆண்டு முழுவதும் குடும்பச் செலவு, திருமணம், மரணம் ஆகிய சடங்குகளுக்கு தேவையானபோது கடன் கொடுக்க வேண்டும். அத்துடன் நகைகள், பாத்திரங்கள் அடமானம் வைத்து கடன் வாங்க வசதி செய்து கொடுக்க வேண்டும்.	இப்போதுள்ள விதிகளின்படி கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் அங்கத்தினர்களுக்கு அவர்கள் சொந்த பொறுப்பில் திருமணம் மற்றும் மருத்துவச் செலவிற்கு ரூ. 250-க்கு மேற்படாமலும் ஈமச் சடங்குகளுக்கு ரூ. 75-க்கு மேற்படாமலும் கடன்கள் வழங்கி வருகின்றன. ரூ. 2,000-க்கு மேற்படாமல் தங்கநகை மற்றும் வெள்ளி பாத்திரங்களின் அடகின் பேரில் கடன்கள் வழங்கப்படுகின்றன.

9	கூட்டுறவு ஸ்தாபனங்களில் கொடுக்கும் கடன்களுக்கு அபராத வட்டி விதித்து வசூலிக்கும் முறை ரத்து செய்யப்பட வேண்டும்.	கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள் குறித்த தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்தாவிட்டால் அபராத வட்டி விதிக்கப்படுகிறது. அபராத வட்டி வசூலிக்காவிட்டால், கடனைத் திரும்பச் செலுத்துவதில் அவ்வளவு அக்கறை இருக்காது. சங்கத்தின் நிதி நிலைமை பாதிக்கப்படும். எனவே இந்தத் தீர்மானத்தை ஏற்க இயலாது.
10	கூட்டுறவு கடன் பாக்கிகளை வசூலிக்க உற்பத்தி கருவிகள், மாடுகள், இஞ்சின் மோட்டார் பம்புசெட், நிலம், வீடு போன்றவைகளை ஜப்தி செய்வதை தடை செய்ய வேண்டும்.	ஜப்தி செய்வது, அதில் கடைப் பிடிக்க வேண்டிய விதி முறைகள் பற்றி தமிழ் நாடு கூட்டுறவு சட்ட விதிகளில் (விதிகள் 59–83) குறிப்பிடப்பட்டிருக்கிறது.
11	கூட்டுறவு நாணய சங்கங்கள் மூலம் கொடுக்கும் கடன்களுக்குக குறுகியகால கடன் என்பது மூன்று ஆண்டு என்றும், நீண்டகால கடன் என்பது பத்து ஆண்டு என்றும் கடனுக்காக காலக்கெடு நிச்சயிக்க வேண்டும்.	உழவர்கள் தமது விவசாயத்தின் மகசூலிலிருந்து கடனைத் திரும்பச் செலுத்தும் வசதிக்காகவே குறுகிய காலக் கடன் என்று வழங்கப்படுகிறது. சாதாரணமாக ஒரு ஆண்டுக்குள் பயிர்விளைந்து மகசூல் பெறக்கூடுமாதலால் பயிர்க்கடன் போன்ற குறுகிய கால கடன்களுக்கு திருப்பித்தர ஒரு ஆண்டு என்ற அவகாசம் போதுமானதே. நீண்டகாலக் கடன் என்பது என்ன காரியத்திற்காகக் கடன் பெறப்படுகிறது என்பதைப் பொறுத்து ஏழு ஆண்டு முதல் பதினைந்து ஆண்டு வரை திரும்பச் செலுத்த அவகாசமளிப்பதாகும். இந்த விதி முறைகளை மாறுதல் செய்யத் தேவையில்லை.

வரிசை எண் (1)	தீர்மானம். (2)	எடுக்கப்பட்ட நடவடிக்கை. (3)
12	தன் சொந்தப் பணத்தை வட்டிக்குக் கொடுத்து வாங்கும் நபர்களைக் கூட்டுறவு வங்கி ஸ்தாபனங்களில் உறுப்பினர்களாக சேர்க்கக்கூடாது.	கூட்டுறவு சங்கப் பதிவாளரின் குறிப்புரைகள் கோரப்பட்டு அவை எதிர்ப்பார்க்கப் படுகின்றன.
13	அடகுக் கடைக்காரர்களுக்கு தேசவுடைமை யாக்கப்பட்ட வங்கிகளிலும், கூட்டுறவு வங்கிகளிலும் நகை அடமானம் வைத்து கடன் வாங்க அனுமதிக்கக்கூடாது.	கூட்டுறவு சங்கப் பதிவாளரின் குறிப்புரைகள் கோரப்பட்டு அவை எதிர்ப்பார்க்கப் படுகின்றன.
14	கூட்டுறவுத் துறை நிர்வாகப் பொறுப்பின் ஏழை, மத்திய தர விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு 75 சதவிகித இடம் வழங்க வேண்டும்.	கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் குறிப்புரைகள் கோரப்பட்டு அவை எதிர்ப்பார்க்கப் படுகின்றன.
15	கைத்தறித் தொழிலாளர்கள், சிறுவர்த்தகர்கள், தொழிலதிபர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஆலைத் தொழிலாளர்கள், தினக் கூலித் தொழிலாளர்கள் அனைவருக்கும் தேவையான கடன்களை அரசுடமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் கொடுத்து உதவ வேண்டுமென்று மத்திய மாநில அரசுகளை இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.	தீர்மானம் பொதுப்படையாக உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS